# தஞ்சாவூர் மாநகராட்சி

## சொத்துவரி திருத்தம் – 2022

ந.க.எண்.5111/2022/எம்சிஏ2, நாள்.11.04.2022. மாநகராட்சி அலுவலகம்,
தஞ்சாவூர்.

## அறிவிப்பு

அரசாணை (நிலை) எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.03.2022–ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டம் 1981–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.1, நாள்.11.04.2002–ன்படியும் தஞ்சாவூர் மாநகராட்சி சொத்துவரியினை 01.04.2022 முதல் மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building):

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

காலிமனைவரி சீராய்வு:

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனைவரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும்போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனைவரி விதிப்பு செய்யப்பட வேண்டும்.

இந்த மதிப்பீடு சொத்து உரிமையாளர்/ குடியிருப்போர் / குத்தகைதாரர் சமர்ப்பிக்கும் சொத்துவரி சுயமதிப்பீடு விவர அறிக்கையில் உள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இருக்கும்.

மேற்படி அரசாணைகளின்படி சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளதால் தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சொத்துக்களின் உரிமையாளர்கள் / குடியிருப்போர்/ குத்தகைதாரர்கள் அவர்கள் வசமுள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய சொத்துவரி சுயமதிப்பீட்டு விவர அறிக்கையினை 15.06.2022–ம் தேதிக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

குறிப்பிட்ட தேதிக்குள் சொத்துவரி சுயமதிப்பீட்டு விவர அறிக்கை தாக்கல் செய்யாத மதிப்பீட்டாளர்களின் சொத்துக்கள் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு, உத்தரவளிக்கப்பட்டு அதனடிப்படையில் சொத்துவரி மறு மதிப்பீடு செய்யப்படும்.

சொத்துவரி சுய மதிப்பீட்டு விவர அறிக்கையில் தாக்கல் செய்துள்ள விபரங்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், வேறுபாடுகள் தொடர்பாக ஆணையாளரால் சொத்து உரிமையாளருக்கு தகுந்த வாய்ப்புகள் வழங்கப்பட்டு, சொத்து உரிமையாளர்களிடம் கட்டிட பரப்பளவு, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட ஆண்டு மற்றும் உபயோகம் குறித்து ஆட்சேபனை கோரப்பட்டு, அதனடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட காலத்திலிருந்து மறுமதிப்பீடு செய்யப்பட்டு, சொத்துவரி கேட்பு முடிவு செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்படுகிறது.

தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்து உரிமையாளர்கள் கீழ்க்கண்ட முறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் சொத்துவரி சுய மதிப்பீடு தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1) சொத்துவரி சுய மதிப்பீடு அறிக்கைக்கான படிவத்தினை மாநகராட்சி அலுவலகத்தில் நேரடியாக பெற்று பூர்த்தி செய்து நேரடியாக சமர்ப்பிக்கலாம்.
2) சொத்துவரி சுய மதிப்பீடு அறிக்கை படிவத்தினை தஞ்சாவூர் மாநகராட்சி இணையதள முகவரி (www.tnurbantree.tn.gov.in/thanjavur) மூலமாக பதிவிறக்கம் செய்து, அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது இணையவழி (Online) மூலமாக பதிவிறக்கம் செய்யலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட சொத்துவரி சுயமதிப்பீடு அறிக்கையை மாநகராட்சி ஆணையாளர், தஞ்சாவூர் மாநகராட்சி என்ற முகவரியிட்டு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அல்லது இணையவழி (Online) மூலமாகவோ 21.05.2022 முதல் 15.06.2022–க்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இப்பணியில் சொத்து வரியேற்புக்குரியவர்கள் மாநகராட்சிக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் இம்மாமன்ற தீர்மானம் எண்.01, நாள்.11.04.2022–ன்படி கீழ்க்கண்டுள்ளவாறு மண்டல அடிப்படை மதிப்பு (Zone Value) 01.04.2022 முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. A, B, C மற்றும் D என 4 மண்டலங்களாக தெருக்கள் பிரிக்கப்பட்டு, விவரங்கள் தஞ்சாவூர் மாநகராட்சி இணையதள முகவரி (www.tnurbantree.tn.gov.in/thanjavur) மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சி அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்விவரங்கள் மேற்படி இணையதளத்தின் வாயிலாகவும், மாநகராட்சி அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில்வந்து தெரிந்து கொள்ளலாம். மேலும் தற்போதுள்ள A, B, C, D மண்டலங்களை மற்ற மாநகராட்சிகளில் உள்ளதை போன்று கீழ்க்கண்டுள்ளவாறு 2022–2023 முதல் அரையாண்டு முதல் மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | | |
|---|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | மண்டலம் | உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு |
| A | 0.50 (குடிசைப்பகுதி) | A (வணிகப்பகுதி) | 3.00 |
| B | 0.75 (குடியிருப்பு பகுதி) | B (வணிகம் மற்றும் குடியிருப்பு பகுதி) | 2.00 |
| C | 2.0 (வணிகம் மற்றும் குடியிருப்பு பகுதி) | C (குடியிருப்பு பகுதி) | 1.50 |
| D | 1.50 (வணிகப்பகுதி) | D (குடிசைப்பகுதி) | 1.00 |

மேலும் இதுகுறித்து ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாக தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளருக்கு அனுப்பலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

11/4/22

ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி

இடம்: தஞ்சாவூர்.
நாள்: 11.04.2022

11.4.2022
11/4/2022